நமது அரசமைப்புச் சட்டத்தை வலுப்படுத்த ஓர் உறுதிப்பாடு

பிரதமர் நரேந்திர மோடி

1949 நவம்பர் 26-ஆம் தேதி, அரசியல் நிர்ணய சபை, நமது அரசமைப்புச் சட்டத்தை ஏற்றுக் கொண்டது. நாட்டின் முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத், பாபா சாகேப் அம்பேத்கர் உள்பட அரசியல் நிர்ணய சபையின் ஒவ்வொரு உறுப்பினரையும் இன்று நாம் நினைவுகூர்கிறோம். இந்தியாவின் செழுமையான மரபுகள், நாகரிக ஞானத்திலிருந்து விரிவாகப் பெற்ற கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, நவீன அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியதே அவர்களின் போற்றத்தக்க செயல்பாடாகும்.

பல்வேறு மதங்கள், மொழிகள், பழக்கவழக்கங்கள், சிந்தனைப் போக்குகளைக் கொண்ட பன்முகத்தன்மை நிறைந்த இந்தியா போன்ற நாட்டில், அரசமைப்புச் சட்டத்தின் தாக்கம் நாடாளுமன்றம், நீதிமன்றங்களின் எல்லைக் கடந்து, மக்களின் வாழ்விலும் ஆழமாகப் பதிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. அரசமைப்புச் சட்டத்துக்கும் மக்களின் கூட்டு உணர்வுக்கும் இடையிலான தொடர்பை மேலும் வலுப்படுத்தி, குறிப்பாக இளைஞர்களிடையே அதன் மீதான ஈடுபாட்டை ஆழப்படுத்துவதுடன், இந்தியாவின் சிறந்த எதிர்காலத்துக்கு இன்றியமையாத ஒற்றுமை உணர்வை வலுப்படுத்துவதில் நாம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இதனால்தான், 10 ஆண்டுகளுக்கு முன்பே, நமது அரசு நவம்பர் 26-ஆம் தேதியை அரசமைப்புச் சட்ட தினமாகக் கொண்டாட முடிவு செய்தது.

என்னைப் போன்று எளிய பொருளாதாரப் பின்னணியைக் கொண்ட, பிறப்பால் எந்தவொரு சலுகையோ வாய்ப்போ இல்லாத குடும்பத்தில் பிறந்தவர்களும், ஒரு நாள் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டிற்குச் சேவையாற்றும் பொறுப்பை ஏற்கும் நிலைக்கு உயர முடியும் என்பது, நமது அரசமைப்புச் சட்டத்தின் மகத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

சமூக, பொருளாதார நீதியை நிலைநாட்டுவதற்கான தேடல், நமது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சங்களில் ஆழமாகப் பதிந்துள்ளது. எனவே, நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களின் இந்த உன்னதமான தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதற்காக உழைப்பதை விட, அதிக மன நிறைவைத் தரக்கூடிய விஷயம் வேறென்ன இருக்க முடியும்?

உலக வங்கியின் சமீபத்திய அறிக்கையின்படி, இந்தியாவில் சுமார் 50 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீண்டுள்ளனர். தலைமுறை தலைமுறையாக நிலவி வந்த வறுமை, பற்றாக்குறை சூழலிலிருந்து விடுபட்டு, கோடிக்கணக்கான பெற்றோர் தற்போது தங்கள் குழந்தைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவது குறித்து கனவு காண முடிகிறது.

கடந்த 10 ஆண்டுகளாக, குடிமக்களின் கடமைகளுக்கு நாம்



சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறோம். நமது நாகரிகம், சமூகத்தில் ஒவ்வொருவருக்கும் பொறுப்புடன் கூடிய கடமைகளுக்கு முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. தூய்மை இந்தியா இயக்கம் முதல் நீர் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு வரையிலான பல்வேறு மக்கள் இயக்கங்களில் கடமை உணர்வு வெளிப்பட்டுள்ளது.

இருப்பினும், மற்றொரு யதார்த்தத்தையும் நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். அரசமைப்புச் சட்டத்தைபாதுகாக்கும்பொறுப்பில் உள்ளவர்களே அதனைப் பல வீனப்படுத்த முயன்ற சந்தர்ப்பங்களும் நமது வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. இதில் முரண்பாடான விஷயம் என்னவென்றால், ஐம்பது ஆண்டுகளாக இந்தியாவை ஆளும் வாய்ப்பைப் பெற்றிருந்தவர்களும் அவர்கள்தான். அதிகாரப் பேராசை கொண்ட, அரசமைப்புச் சட்ட நெறிமுறைகளுக்கு எதிராகச் செயல்படும் தலைமைத்துவம் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடும் என்பதை அறிந்துகொள்வதற்கு, 38 மற்றும் 39-ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் குறித்தும் இளைஞர்கள் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைக் கலைப்பதற்காக அரசமைப்புச் சட்டத்தின் 356-வது பிரிவு மீண்டும் மீண்டும் தவறாகப் பயன்படுத்தப்பட்டதும், கவலைக்குரிய மற்றொரு வரலாற்று அத்தியாயமாகும்.

எதிர்க்கட்சிகளில் உள்ள மிகப் பெரிய கட்சி, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டைக் குறைத்து, இஸ்லாமியர்களுக்கான இட ஒதுக்கீட்டைக் கொண்டுவர விரும்புவது மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. பாபாசாகேப் அம்பேத்கர் உள்ளிட்ட நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள், இதை முற்றிலுமாக எதிர்த்தனர்.

நமது அரசமைப்புச் சட்டத்தின் பயணத்தை வடிவமைப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய பெண்களை அங்கீகரிக்காமல், அதன் வரலாறு முழுமையடையாது. ஆனால், நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவை அமைப்புகளில் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு சட்டமுன்வடிவம் நிறைவேற்றப்படுவதை, ஒரு குறிப்பிட்ட எதிர்க்கட்சியினர் தடுத்தனர்.

இது, அரசமைப்புச் சட்ட மாண்புகள் மீதான அவர்களது அலட்சியப் போக்கை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தியுள்ளது. மகளிர் சக்திக்கு உரிய நீதி கிடைப்பதை உறுதி செய்வதை எந்தவொரு சக்தியாலும் தடுக்க முடியாது.

இன்று, இந்தியா ஒரு முக்கிய மான திருப்புமுனையில் உள்ளது. 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான நமது முயற்சிகளில், இரண்டு எளிய, அதேசமயம் வலிமையான கொள்கைகள் நமது கூட்டு முயற்சிகளுக்கு வழிகாட்டிகளாக திகழ்கிறது: நமது சிந்தனையில் 'தேசத்திற்கு முன்னுரிமை' என்ற உணர்வு; செயல்பாடுகளில் கடமை உணர்வு. இவற்றை வழிகாட்டும் கொள்கைகளாகவும், இந்திய அரசமைப்புச் சட்டம் நமது வலிமையின் ஆதாரமாகவும் கொண்டு செயல்பட்டால், வருங்காலத் தலைமுறையினருக்கு ஒளிமயமான எதிர்காலத்தை நம்மால் உறுதிசெய்ய முடியும்.

சவூதி அரேபியாவில் நடத்தப்பட்ட தாக்குதலில் 2 இந்தியர்கள் காயம்

வெளியுறவு அமைச்சகம் கடும் கண்டனம்

புது தில்லி, நவ. 25: சவூதி அரேபிய தலைநகர் ரியாத்தில் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் இரு இந்தியர்கள் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு இந்திய வெளியுறவு அமைச்சகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

யேமனில் செயல்படும் ஈரான் ஆதரவுஹூதி அமைப்பினர், சவூதி அரேபியா மீது முன்பு தொடர்ந்து ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வந்தனர். கடந்த சில நாள்களாக அவர்கள் தாக்குதல் நடத்துவதை நிறுத்தி வைத்துள்ளனர்.

இந்நிலையில், ரியாத்திலுள்ள நிதி மாவட்டம் மீது செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் 2 இந்தியர்கள் காயமடைந்தனர். இதுதவிர்த்து, எகிப்து நாட்டைச் சேர்ந்த 4 பேர், நேபாளத்தைச் சேர்ந்த 3 பேர், சவூதி அரேபியாவைச் சேர்ந்த 2 பேரும் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலை நடத்தியது யார் என்பது குறித்து தகவல் இல்லை. ஹூதி அமைப்பினர் தரப்பில் இதுகுறித்து எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

இந்தத் தாக்குதலுக்கு தில்லியில் உள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது. இதுகுறித்து இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ரியாத்தில் நடத்தப்பட்ட தாக்குதலை இந்தியா கடுமையாகக் கண்டிக்கிறது. அதேபோல் பொதுமக்கள், பொருளாதார மற்றும் எரிசக்தி உள்கட்டமைப்பைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலையும் இந்தியா கடுமையாகக் கண்டிக்கிறது.

இந்தத் தாக்குதலில் 2 இந்தியர்களும் காயமடைந்தனர். இவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் ரியாத்தில் உள்ள இந்தியத் தூதரகம் செய்து தரும்.

இத்தகைய தாக்குதல் பொதுமக்கள் உயிருக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்துகிறது. மேலும், சவூதி அரேபியாவின் இறையாண்மைக்கு எதிரானது. பிராந்திய பாதுகாப்பு, ஸ்திரத்தன்மையை இந்தத் தாக்குதல் பாதிக்கும். இத்தகைய தாக்குதல்களை உடனடியாக நிறுத்தும்படி இந்தியா வேண்டுகோள் விடுக்கிறது. இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் விவகாரத்தில் சவூதி அரேபியா அரசுக்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கிறது. அந்த பிராந்தியத்தில் விரைவில் அமைதி மற்றும் இயல்புநிலை திரும்பும் என்று இந்தியா நம்புகிறது என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

மும்பை தாக்குதல் நினைவு தினம்!



மும்பையில் கடந்த 2008-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் தேதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் ஜம்மு-காஷ்மீரின் ஜம்மு நகரில் உள்ள பள்ளியில் புதன்கிழமை பதாகைகளுடன் அஞ்சலி செலுத்திய மாணவ, மாணவிகள்.

பாட்டில் குடிநீர் மீது கண்காணிப்பைத் தீவிரப்படுத்த உத்தரவு

புது தில்லி, நவ. 25: பாட்டில்களில் அடைத்து விற்பனை செய்யப்படும் குடிநீர் மீது கண்காணிப்பைத் தீவிரப்படுத்துமாறு மாநில அரசுகளுக்கு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் (எஃப்எஸ்எஸ்ஏஐ) வலியுறுத்தியுள்ளது.

பிரபல பிஸ்லெரி நிறுவனத்தின் குடிநீர் மக்கள் பயன்படுத்துவதற்கு பாதுகாப்பானதாக இல்லை என்பது உள்ளிட்ட பல்வேறு சர்ச்சைகள் எழுந்த நிலையில் அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாநில மற்றும் யூனியன் பிரதேச உணவுப் பாதுகாப்பு ஆணையர்களுக்கு எஃப்எஸ்எஸ்ஏஐ கடிதம் எழுதியுள்ளது. அதில், 'பாட்டிலில் அடைக்கப்பட்டு விற்கப்படும் குடிநீர், மினரல் குடிநீர் உள்ளிட்டவற்றின் மீது கண்காணிப்பை தீவிரப்படுத்தவேண்டும். குறிப்பிட்ட கால இடைவெளியில் மாதிரிகளை சேகரித்து சோதனை மேற்கொள்ள வேண்டும். தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டால் உரிய சட்டவிதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாதிரிகள் சேகரிப்பு, அதன் முடிவுகள், குறைகள் இருந்தால் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் தங்கள் நிறுவனத்தின் குடிநீர் பாதுகாப்பானது என்று பிஸ்லெரி நிறுவனம் விளக்க மளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜம்மு-காஷ்மீரில் தேடப்பட்ட 30 பயங்கரவாதிகள் பாகிஸ்தானில் தஞ்சம்

காவல் துறை தகவல்

ஜம்மு, நவ. 25: காஷ்மீரில் தேடப்பட்ட 30 பயங்கரவாதிகள், பாகிஸ்தானில் தஞ்சம் அடைந்திருப்பதாக காவல் துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் காவல் துறை தலைமை இயக்குநர் நளின் பிரபாத் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

காஷ்மீரின் ரியாசி மாவட்டம், மகோர் மற்றும் சாசனா பகுதிகளைச் சேர்ந்த 30 பயங்கரவாதிகள் கடந்த 1991-ஆம் ஆண்டு முதல் 2003-ஆம் ஆண்டு வரை 30 பயங்கரவாதிகள் காணாமல் போயிருந்தனர். அந்த 30 பயங்கரவாதிகளும் இந்தியாவுக்கு எதிராக போர் தொடுக்க ஆயுதப் பயிற்சி பெற எல்லையைத் தாண்டி பாகிஸ்தானுக்கு சென்றிருப்பதாக மகோர் காவல்நிலையத்துக்கு நம்பத்தகுந்த வட்டாரங்களிடம் இருந்து தகவல் வந்துள்ளது.

அந்த 30 பயங்கரவாதிகளும் தற்போது பாகிஸ்தானில் உள்ள ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பில் இணைந்து செயல்பட்டு வருகின்றனர். மேலும், ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நோக்கில், ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள், பணத்தை விநியோகித்து வருகின்றனர். அதேபோல் தங்களது பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களுக்கு பயங்கரவாத செயல்களில் ஈடுபடும்படி மூளைச்சலவை செய்தும் வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அந்த 30 பயங்கரவாதிகளின் பெயர்களையும் காவல் துறை தலைமை இயக்குநர் நளின் பிரபாத் தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது:

இந்த 30 பயங்கரவாதிகள் மீதும் மகோர் காவல் நிலையத்தில் பிஎன்எஸ் சட்டம், வெடிபொருள்கள் கட்டுப்பாட்டு சட்டப் பிரிவு, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் ஆகியவற்றில் உள்ள பிரிவுகளின்கீழ் 2024-ஆம் ஆண்டில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்குத் தொடர்பான விசாரணையின்போது, சாட்சிகள் தரப்பில் 5 பயங்கரவாதிகள் அடையாளம் காட்டப்பட்டனர்.

மேலும், அந்த சாட்சிகள் தரப்பில் 5 பயங்கரவாதிகளும் எல்லை தாண்டி பாகிஸ்தானுக்கு சென்று ஆயுதப் பயிற்சி எடுக்க சென்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த 5 பயங்கரவாதிகளுக்குச் சொந்தமாக இருக்கும் நிலங்களை காவல் துறை பறிமுதல் செய்துவிட்டது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீனவர் பிரச்னை: இந்தியா-இலங்கை ஜனவரி 22-இல் பேச்சு

கொழும்பு, நவ. 25: மீனவர்கள் பரஸ்பரம் எல்லை தாண்டும் பிரச்னை உள்பட பாக் நீரிணையில் மீன் பிடிப்பது தொடர்பாக இந்தியா-இலங்கை இடையே நீண்ட காலம் நிலுவையில் உள்ள விவகாரங்கள் குறித்து தில்லியில் அடுத்த ஆண்டு ஜனவரி 22-ஆம் தேதி பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. இத்தகவலை இலங்கை மீன்வளத் துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகரன் புதன்கிழமை தெரிவித்தார்.

அவர் கூறுகையில்,'இருநாடுகளின் மீன்வளத் துறையை பாதிக்கும் முக்கிய சவால்களுக்கு தீர்வுகாண்பது குறித்து விரிவாக விவாதிப்பதற்காக, தில்லியில் ஜனவரி 22-ஆம் தேதி இந்தியா-இலங்கை துறைசார் கூட்டுப் பணிக் குழுவின் கூட்டம் நடைபெறவுள்ளது.

இலங்கை தரப்பில் மீன்வளம், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் பெருங்கடல் வளங்கள் துறை செயலர் தலைமையிலானக் குழு பங்கேற்கும். மீனவர்கள் எல்லை தாண்டும் பிரச்னை, கடல்சார் சூழலியலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் தடை செய்யப்பட்ட சுருக்குமடி வலையை மீனவர்கள் பயன்படுத்துவது உள்ளிட்ட விவகாரங்கள் விரிவாக விவாதிக்கப்படும். மீன்பிடி பிரச்னைக்கு நிலையான, நடைமுறை சார்ந்த தீர்வைக் கண்டறிய இலங்கை உறுதிப்பாட்டுடன் உள்ளது. இது தொடர்பாக இரு நாடுகளும் தூதரக மற்றும் அதிகாரிகள் அளவில் பன்முக பேச்சுவார்த்தைகளை ஏற்கெனவே மேற்கொண்டுள்ளன' என்றார். இதற்கு முன்பு கடந்த 2024-இல் இலங்கை தலைநகர் கொழும்பில் இந்தியா-இலங்கை மீன்வள கூட்டுப் பணிக் குழு கூட்டம் நடைபெற்றது. இதில் இந்திய மீன்வளத் துறை செயலர் மற்றும் கடற்படை பிரதிநிதிகள் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

கேரள அரசுப் பள்ளியில் மாணவர் துப்பாக்கிச்சூடு: தாய் மீது வழக்கு

பாலக்காடு, நவ. 25: கேரள அரசுப் பள்ளிக்கு துப்பாக்கியுடன் வந்த 9-ஆம் வகுப்பு மாணவர், அதை வைத்து விளையாடியபோது சக மாணவர் மீது குண்டு பாய்ந்தது. இந்த சம்பவம் தொடர்பாக அந்த மாணவரின் தாய் மீது காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்தனர்.

பாலக்காடு மாவட்டம், திரிதலாவில் செவ்வாய்க்கிழமை இந்த சம்பவம் நிகழ்ந்தது. அரசுப் பள்ளியில் 9-ஆம் வகுப்பு படிக்கும் மாணவர் துப்பாக்கியுடன் பள்ளிக்கு வந்துள்ளார். வகுப்பறையில் சக மாணவர்களுடன் அந்தத் துப்பாக்கியை வைத்து விளையாடினார். அப்போது துப்பாக்கி விசையை அந்த மாணவர் எதிர்பாராதவிதமாக அழுத்தியதால் குண்டு பாய்ந்தது. இதில் எதிரே இருந்த மற்றொரு மாணவர் சரிந்து விழுந்தார்.

துப்பாக்கி ஒசை கேட்டு வகுப்பறைக்கு வந்த ஆசிரியர்கள் உள்ளிட்டோர் உடனடியாக காவல் துறைக்கு தகவல் தெரிவித்ததுடன், குண்டு பாய்ந்த ரத்த வெள்ளத்தில் போராடிய மாணவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தற்போது சிகிசைக்குப் பிறகு அந்த மாணவரின் உடல்நிலை சீராக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக துப்பாக்கியால் சுட்ட மாணவர் மீது சிறார் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விசாரணையில் அது சட்டவிரோமாக தயாரிக்கப்பட்ட நாட்டுத் துப்பாக்கி என்பது உறுதியானது. இதையடுத்து, துப்பாக்கியை வீட்டில் மறைத்து வைத்திருந்த அந்த மாணவரின் தாயார் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மாணவரின் தந்தை ஏற்கெனவே இறந்துவிட்டார்.

சட்டவிரோதமாக ஊடுருவிய வங்கதேச முஸ்லிம்களை வெளியேற்ற வேண்டும்

காவல் துறைக்கு மேற்கு வங்க முதல்வர் உத்தரவு

கூச் பிகார், நவ. 25: மேற்கு வங்கத்துக்குள் சட்டவிரோதமாக ஊடுருவியுள்ள வங்கதேச முஸ்லிம்களைக் கண்டறிந்து வெளியேற்ற வேண்டும் என்று காவல் துறைக்கு மேற்கு வங்க முதல்வர் சுவேந்து அதிகாரி உத்தரவிட்டார்.

வங்கதேச எல்லையை ஒட்டி அமைந்துள்ள ஊடுருவல் அதிகம் நிகழும் கூச் பிகார் மாவட்டத்தில் ராஷ் மேளா பண்டிகையில் புதன்கிழமை பங்கேற்ற அவர் பேசியதாவது:

இந்த மாவட்டத்தில் சட்டவிரோதமாக ஊடுருவியுள்ள வங்கதேச முஸ்லிம்கள் ஒவ்வொருவராகக் கண்டறிந்து, அவர்கள் வந்த வழியிலேயே திருப்பி அனுப்ப வேண்டும் என்று மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

அதே நேரத்தில் அங்கிருந்து வரும் ஹிந்துக்கள் ஊடுருவல்காரர்கள் அல்ல. அவர்கள் அகதிகள். அவர்கள் தங்கள் உயிரையும், குடும்பத்தையும் பாதுகாத்துக் கொள்ளவே நமது நாட்டில் தஞ்சமடைய முயலுகிறார்கள். அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டியது நமது கடமை.



சர்வதேச எல்லையில் சட்டவிரோத ஊடுருவல்களைத் தடுப்பதில் மேலும் தீவிரமாக செயல்பட வேண்டும் என்று எல்லைப் பாதுகாப்புப் படை, காவல் துறைக்கு ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த படையினருக்கு போதிய நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எல்லை வழியாக கள்ள நோட்டுகளை கடத்தி புழக்கத்தில் விடுவது, போதைப்பொருள் கடத்தல் போன்ற நாட்டை சீரழிக்கும் செயல்களில் ஒரு கும்பல் ஈடுபடுகிறது.

அவர்களுக்கும், அவர்களுக்கு உதவும் இங்குள்ள தேசவிரோதிகளுக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசவிரோத செயல்கள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் உள்ளிட்ட எந்தத் தவறையும் செய்ய யாரும் துணியக் கூடாது.

அவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மீண்டும் எச்சரிக்கிறேன் என்றார்.

நெட்பிளிக்ஸில் பாகிஸ்தான் தொடரை வெளியிடக் கூடாது

திரைப்பட அமைப்புகள் எதிர்ப்பு

புது தில்லி/இஸ்லாமாபாத், நவ.25: நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் பாகிஸ்தானின் 'ஜோ பச்சே ஹெயின் சங் சமாய்த் லோ' தொடரை வெளியிட இந்திய திரைப்பட அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இது தொடர்பான முன்னோட்ட காட்சிகள் நெட்பிளிக்ஸ் நிறுவனத்தால் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டிருந்தது. அதில் டிசம்பர் 4-ஆம் தேதி அந்த தொடர் தங்களது ஓடிடி தளத்தில் வெளியாக இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அது பாகிஸ்தானுக்கு மட்டுமா அல்லது இந்தியா உள்ளிட்ட நாடுகளிலும் வெளியிடப்படுமா என்பது குறித்து தெரிவிக்கப்படவில்லை.

இந்நிலையில் அந்த தொடரை இந்தியாவில் வெளியிடக் கூடாது என்றும், அதற்கு தடை விதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி பிரதமர் நரேந்திர மோடிக்கு பல்வேறு இந்திய திரைப்பட அமைப்புகள் கடிதம் எழுதியுள்ளன. பகல்காம் பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தை அடுத்து, ஓடிடி தளங்களுக்கு மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் பாகிஸ்தானைச் சேர்ந்த நிகழ்ச்சிகள் ஒளிபரப்ப தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும், அப்படியிருக்கையில் நெட்பிளிக்ஸ் தளத்தில் புதிய தொடர் வெளியாவது அந்த உத்தரவை மீறும் செயலாகும் என்றும் திரைப்பட அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இந்தியாவில் அந்தத் தொடர் வெளியாகும் முன்பே அதற்கு எதிர்ப்பு எழுந்திருப்பது குறித்து பாகிஸ்தான் திட்டமிடல் துறை அமைச்சர் இக்பால் கூறுகையில், முதலில் விளையாட்டு ஆயுதமாக பயன்படுத்தப்பட்டதாகவும், பிறகு நீர் பயன்படுத்தப்பட்டதாகவும், தற்போது கலைமற்றும்கலாசாரம்பயன்படுத்தப்படுவதாகவும் விமர்சித்துள்ளார்.

அசல் பத்திரங்கள் காணவில்லை

இதன் மூலம் அளிக்கப்படும் அறிவிப்பு யாதெனில் மதுரை சார்பதிவாளர் அலுவலகம்-4-ல் பதிவு செய்யப்பட்ட, 23.12.1992 நாளிடப்பட்ட ஆவண எண் 1016/93 கொண்ட அசல் கிரையப் பத்திரமானது மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், மாடக்குளம் பிரதான சாலையில் உள்ள, சர்வே எண் 339/3-ல் அமைந்துள்ள 5719 ஏக்கர் சொத்து தொடர்பானது. இதன் உரிமையாளர் திரு. R. சோமாலிகுருஞானன் இதுவும் அதற்கு முந்தைய 26.10.1988 நாளிடப்பட்ட ஆவணங்கள் எண் 3223/88 ஆகியவை, இந்திய வங்கியில் கடன் வசதிக்காக அடமானம் வக்கப்பட்டிருந்தன. கடன் கணக்கு முழுமையாகத் தீர்க்கப்பட்ட நிலையில், வங்கியின் பாதுகாப்பில் இருந்த இந்த அசல் ஆவணங்கள் 27.10.2026 அன்று காணாமல் போய்விட்டன. மேற்கூறிய அசல் ஆவணங்களைக் கண்டெடுப்பவர்கள் அல்லது அவை இருக்குமிடம் குறித்துத் தகவல் தெரிந்தவர்கள், தயவுசெய்து அவற்றை ஒப்படைக்குமாறும் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள கிளை மேலாளருக்குத் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அன்புடன்,
T செல்வ பாண்டியன்
கிளை மேலாளர், இந்திய வங்கி
கொக்கராயன்பேட்டை
தொடர்பு எண்: 94427 00025

HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிட்டெட்

பதிவு அலுவலகம் – ராதிகா, 2 வது தளம், லா கார்டன், நவ்ரங்புரா, அஹமதாபாத் – 09, கிளை அலுவலகம் – HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிட்டெட்., எண். 3, திவ்யா ட்ரேட் சென்டர், இரண்டாவது தளம், பிருந்தாவன் சாலை, சேலம் – 636 016

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

(கடன்தாரர் / கூட்டு – கடன்தாரர் / பொது மக்களுக்கு) (சர்ஃபாசி சட்டம்' 2002 ன் விதி 8(6) – உடன் படிக்க – விதி 9(1) ன் கீழ்)

இதன் கீழ்க்கையொப்பமிட்ட HDB ஃபைனான்சியல் சர்வீஸஸ் லிமிட்டெட் – ன் அதிகாரப்பூர்வ அலுவலர், பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைக்காப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 ன் கீழ் இதன் கீழ்குறிப்பிட்டுள்ள கடன் கணக்குக்காக பின்வரும் சொத்தை "இருக்கின்ற இடத்தில்" & ""இருக்கின்ற நிலையில்" என்ற அடிப்படையில் விற்கும் உரிமையுடன் ஏலத்தினர் எடுத்துள்ளார்.

விண்ணப்பதாரர் & கூட்டு விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி – 1). PRP பேக்கேஜிங், ஸ்ரீ செல்லியம்மன் கார் ஷெட் எண். 1, அப்பணார் கோவில் கடு, தர்மஜன் காய்கள், தில்லை நகர் பிரதான சாலை, சின்னதிருப்பதி, சேலம், சேலம், சேலம் – 636 008 தமிழ்நாடு மேலும், சர்வே எண். 188, புதிய சர்வே எண். 191, T.S. எண் : 28/5, வார்டு 9, கதவு எண். 16, தில்லை நகர் 4 வது குறுக்கு தெரு, பொன்னம்மாபேட்டை கிராமம், சேலம் – 636 001 2). P சித்ரா, 24, குருக்கள் காலனி, M S M கார்டன், சின்னதிருப்பதி, சேலம், சின்னதிருப்பதி, சேலம் – 636 008 தமிழ்நாடு 3). R ப்ரகாஷ், 24, குருக்கள் காலனி, M S M கார்டன், சின்னதிருப்பதி, சேலம், சின்னதிருப்பதி, சேலம் – 636 008 தமிழ்நாடு **கடன் கணக்கு எண். 31957637.**

மொத்த நிலுவைத்தொகை – 25.11.2026 ம் தேதியின் படி ரூ. 1,34,49,935.87/- ரூபாய். ஒரு கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஐந்து மற்றும் பைசா எண்பத்து ஏழு மட்டும்) மற்றும் முழு தொகையையும் செலுத்தும் வரை மேற்கொண்டு வரும் வட்டி / நிகழ் செலவுகள் / செலவுகள் ஆகியன.

ஜாமீன் பெற்ற கடனளித்தவருக்கு தெரிந்த (ஏதேனும் இருப்பின்) வில்லைங்கங்களின் விபரங்கள் – இல்லை

அசையா சொத்துக்களின் விபரங்கள் – சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், சேலம் கிழக்கு இணை 1 சார் பதிவு அலுவலகம், பொன்மாபேட்டை நகர், வார்டு 9, சீ சர்வே வார்டு M, ப்ளாக் எண். 11, TS எண். 28/5 ல் அமையப்பெற்ற 2400 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய RCC கூரை வீடு மற்றும் இதர வழி வசதி உரிமைகள் உள்ளிட்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். எல்லைகளாவன – வடக்கு – சாவித்திரி சொத்து, தெற்கு – பிரதான தெரு, கிழக்கு – ப்ளாட் எண். 21, மேற்கு – கம்மாணி செட்டியார் சொத்து. அளவீடுகளாவன – கிழமேல் இருபுறமும் – 30 அடி., தென்வடல் இருபுறமும் – 80 அடி., மற்றும் அனைத்து இதர வழி வசதி உரிமைகள் மற்றும் பாதை உரிமைகள்.

| அடிப்படை விலை | டேவணித்தொகை | விலைப்புள்ளி அதிகரிப